# ‘சினிமா பார்க்கும் விஷயத்திலும் சிங்கள மக்களுக்கிருக்கும் உரிமை தமிழருக்கு இருக்கவேண்டும்’’

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

தபால்பெட்டி எண்: 49 மலர் 11
போன்: 389 இதழ்: 45
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 14 முஹறம் 8 வியாழக்கிழமை (27-3-69

யாழ்ப்பாணம், வியா ‘‘இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கும், பாரதத்திலுமுள்ள தமிழ் மக்களுக்குமிடையில் பிரிவினையை உண்டுபண்ண முதலிய தி. மு. க. பூச்சாண்டி என்ற அரசியல் கெடுதி கையாளப்பட்டது. அது பலனளிக்கவில்லை. இப்போது தமிழ்க் கலை, கலாச்சாரத்தின்மூலம் அரசாங்கம் எமக்குள் பிரிவினையை உண்டுபண்ணப் பார்க்கின்றது. இதன்பலன் தான் தமிழ்ப் படங்களுக்கு 3 பிரதிதான் எடுக்கமுடியுமென விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடாகும்.’’

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற எம். ஜி. ஆர். கருணாநிதி வெற்றிவிழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

சிங்கள மக்களுக்குச் சிங்களப்படம் எப்படி அவசியமோ அப்படித்தான் தமிழ்ப்படங்கள் தமிழ் மக்களுக்கு அவசியம்,

மலாயா, இந்தியா, யாவா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய எந்த அரசின் கீழ் தான் தமிழ்மக்கள் வாழ்ந்தாலும் அவர்களது இன, மொழி, மத, கலாச்சாரம் ஒன்றானவை. அவை பிரிக்க முடியாதவை.

இலங்கையில் தமிழை அழிக்கவும், சிங்களக் கலாச்சாரத்தை வளர்க்கவும் அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு மறைமுகமான சூழ்ச்சிதான் இது. இதனை ஒவ்வொரு தமிழ்மகனும் எதிர்க்கவேண்டும்.

நடிகர் எம். ஜி. ஆர். ஒரு நடிகர் மட்டுமல்ல. தமிழினத்தை தலைநிமிர்ந்து நிற்கச்செய்யும் ஒரு இயக்கத்தின் முக்கிய தூண். இன்று எம். ஜி. ஆருக்கும், தமிழகமுதலமைச்சர் திரு. கருணாநிதிக்கும் நாம் யாழ்ப்பாணத்தில் எடுக்கும் இவ்விழா தமிழ் உணர்ச்சிக்கு எடுக்கும் ஒரு பெருவிழாவாகும்.

விழாவைத் தொடக்கிவைத்த உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டதாவது:

ஒரு இயக்கத்தை வளர்ப்பதானால் அங்கு கட்டுப்பாடும் ஒழுக்கமும் அவசியம் என்பதை தமிழகத்தில் திரு நெடுஞ்செழியனும், முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியும் தமது செயல்மூலம் எடுத்துக்காட்டி விட்டார்கள். பதவிமோகமின்மையால்தான் இன்று தி. மு. க. வளர்ந்துள்ளது. இதனைப் பார்த்து பயந்துள்ள எமது ஆட்சியாளர்கள் எமது கலாச்சாரத்தை எடுத்துக் காட்டும் தமிழ்ப் படங்கள் மூலம் எம்மைப் பிரிக்கலாம் என பகற்கனவு காண்கிறார்கள்.

எம். ஜி. ஆர். என்றால் அவர் தமிழ்மக்களிலும் பார்க்க சிங்கள மக்களிடையேதான் அதிகம் பிரபல்யமானவர். தென்னிலங்கையில் அதிகமான சிங்கள மக்கள் பார்க்கும் படம் எம். ஜி, ஆர். படம்தான். சிறந்த கொடைவள்ளலும், தி. மு. க. மேதையுமான எம். ஜி. ஆர் திரைப்படங்கள் மூலம் இலங்கையில் தமிழர் ஆட்சி வந்துவிடலாம் என்ற பயமும், தமிழ்ப்படங்களுககு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இப்படியான கூட்டங்கள் மூலம் எமது எதிர்ப்புக்களை நாம் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கவேண்டும்.

அலங்கரிக்கப்பட்ட சிகரம் பொருந்திய மேடையில் விழா நடைபெற்றது. வேறு பலரும் விழாவில் பேசினார்கள், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. திரு. கே. புனிதலிங்கம் நன்றி தெரிவித்துப்பேசினார்.

(கா. நி)

# பாகிஸ்தானில் நிலைமை அமைதி
# சட்டம் மீறினால் 10 வருட சிறை

## இராணுவதளபதி அறிவிப்பு

கராச்சி, மார்ச் 26

ராணுவதளபதி அரசாங்கத்தைப் பொறுப்பேற்று ராணுவச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்ட பின்னர் இதுவரை எதுவித அசம்பாவிதங்களும் நடைபெற வில்லையென்றும் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் பாகிஸ்தானில் இருந்து வெளியாகிய செய்திகள் தெரிவித்தன.

பாகிஸ்தானில்வேலைநிறுத்தம் செய்வதற்கும், கூட்டங்கள் நடந்துவதற்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது துருப்புகள் ரோந்து சுற்றுகின்றன.

ஜனாதிபதி அயூப்கான் பதவியிலிருந்துவிலகியதைத் தொடர்ந்து அந்நாட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ராணுவத் தளபதி ஜெனரல் ஈ. எம். யாஹ்யாகான் இவ்வித உத்தரவை பிறப்பித்தார்.

இராணுவச் சட்டத்தை குறை கூறுவோருக்கு பத்து வருட சிறைத் தண்டனையும், கலகக் காரர்களுக்கு மரண தண்டனையும், மற்றும் குற்றங்களுக்கு சவுக்கடி, அபராதம் ஆகியவை விதிக்கப் படுவதுடன் உடமைகளும் பறிமுதல் செய்யப் படுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

—

## தொலைபேசி இப்போது ‘கொலை பேசியாகிறது

### காப்புறுதி கூட்டுஸ்தாபனமும் தமிழில் தடுமாறுகிறது

யாழ்ப்பாணம், வியாழன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் தமிழ்க் கொலையில் ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் இப்போது ஏற்பட்டுள்ளது.

கொழும்பு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விலாசம் புரிந்து கொள்ள முடியாதபடி இருக்கிறதாம்.

கடிதத் தலைப்பில் ஸ்தாபனம் என்பதற்கு ஸ்தாபணம் என்றும் பிரதான வீதி என்பதற்கு பிரநான வீதி என்றும் இருக்கிறதாம். எல்லாவற்றுக்கும் ‘சிகரம்’ வைத்தது போல் தொலைபேசி என்பதற்கு கொலைபேசி என அச்சிடப்பட்டுள்ளதாம்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைமைக் காரியாலயத்திலிருந்து ... துப்பிழைகள் வருவதற்குக் காரணமெனத் தெரிவித்தார். இதுசம்பந்தமாக தாம் உரியவர்களுடன் உடன் தொடர்புகொள்ளப் போவதாகவும் கிளிநொச்சி எம். பி தெரிவித்தார்.

எத்தனைமுறை இக் குற்றங்கள் பற்றி சுட்டிக்காட்டப் பட்டாலும் தொடர்ந்து இவ்வித தவறுகள் எதையும் பொருட்படுத்தாமல் வந்துகொண்டிருப்பது மிகவும் வேதனைப்படவேண்டிய தொன்றாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

—

## உருத்திரபுரம் மக்கள் கஷ்டம்

உருத்திரபுரம், புதன் உருத்திரபுரத்தில் வரட்சி காரணமாக ...

## அரசியல் ஆசை இடையாது நாட்டின் அமைதி முக்கியம்’

கராச்சி, மார்ச் 24

ராணுவத்துக்கு அரசியல் ஆசை இடையாது. நாட்டில் அமைதியை ஏற்படுத் ...

விவேகத்தையும் ... நிலைமையும் ... எமது நோக்கம், சிறந்த ...

## தண்டனை குறைக்கப் பட்டது

சென்னை, மார்ச் 26

தூக்குத்தண்டனை பெற்ற கைதிகளுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு தமிழ் நாடு அரசாங்கம் முன் வந்துள்ளது. மத்திய அரசாங்கம், காந்தி நூற் ...

# கணவனுக்கு கத்திக்குத்து; மனைவியின் தாலிக்கொடி திருட்டு

## மூவர் றிமாண்டில்

வவனியா, புதன் இரவுவேளையில் ஒரு வீட்டினுள் புகுந்த ஆயுதம் தாங்கிய கள்வர் கோஷ்டியொன்று வீட்டுச் சொந்தக்காரரை கத்தியால் குத்தி, மனைவியின் கழுத்திலிருந்த தாலிக் கொடியையும் அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று வவனியாவுக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

சுப்பையாரெட்டியார்என்பவரது வீட்டில் நேற்றிரவு புகுந்த கள்வர் கோஷ்டி, சுப்பையா ரெட்டியாரைக் கத்தியால் குத்தியதாகவும். அவர் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு ... மாகயிருப்பதாகவும் கூறப்பட்டது.

வீட்டிலிருந்த உடுப்புப் பெட்டி ஒன்றையும் இவர்கள் எடுத்துச் சென்று விட்டார்களாம். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேயரில் மூவரை வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெரேரா கைது செய்து மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார். சந்தேக நபர்களான நடராசா, பாலு, கே. ஆறுமுகம் ஆகிய மூவரையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப் பட்டது.

## ஆங்கில பாடத்துக்கு விரைவில் உரிய இடம்

### கல்வி அமைச்சர் தகவல்

கம்பகா, வியாழன் ‘விஞ்ஞானத்துக்கு ஆங்கி ... உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலல ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி என்றும் இருக்கிறதாம். எல்லாவற்றுக்கும் 'சிகரம்' வைத்தது போல் தொலைபேசி என்பதற்கு கொலைபேசி என அச்சிடப்பட்டுள்ளதாம்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைமைக் காரியாலயத்திலிருந்து (கொழும்பு) கிளிநொச்சி கனகபுரம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ள ஒரு கடிதத்தின் தலைப்பில் இவ்வித தமிழ் தடுமாற்றங்கள் இருக்கக் காணப்பட்டதாக இச்சங்க மனேஜர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது அசிரத்தையும் பொறுப்பின்மையுமே இவ்வித எழுத்...

அவர் தெரிவித்தார்.

---

## உருத்திரபுரம் மக்கள் கஷ்டம்

உருத்திரபுரம், புதன்

உருத்திரபுரத்தில் வரட்சி காரணமாக சென்ற மூன்று நான்கு மாதகாலமாக பலர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையின்றி கிணறுகளில் தண்ணீர் இல்லை. இதனால் பொதுமக்கள் எதையும் செய்துகொள்ள முடியாமல் இன்னல்படுகின்றனர். தொடர்ந்து மழை இல்லாவிட்டால் கால்நடைகள் மாண்டுமடிய வேண்டிய நிலை ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

## அரசியல் ஆசை இடையாது நாட்டின் அமைதி முக்கியம்'

கராச்சி, மார்ச் 24

ராணுவத்துக்கு அரசியல் ஆசை கிடையாது. நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது தான் எமது தலையாய நோக்கம் இவ்வாறு பாகிஸ்தானில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ராணுவத் தளபதி ஜெனரல் யாஹ்யா கான் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அமைதி ஏற்பட்டு பொதுத் தேர்தல் மூலம் மக்கள் ஆட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதே ராணுவத்தின் நோக்கம் என்று அவர் இன்று ரேடியோவில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

விவேகத்தையும் மாமூல் நிலைமையும் தோற்றுவிப்பதே எமது நோக்கம், சிறந்த முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு முன் நல்ல திறமையான நிர்வாகம் உருவாகவேண்டும், என்று குறிப்பிட்ட யாஹ்யாகான், அரசியல் திட்டத்தை புதிதாகத் தெரிவு செய்யப்படும் தேசிய சட்டசபை உருவாக்கும் என்ருர் நாட்டில் சீர்குலைந்த நிர்வாகத்தை போதிய அளவு அனுபவித்தாகிவிட்டது. இனிமேலும் அதனை அனுமதிக்கமுடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

பீல்ட்மா ஷல் அயூப்கானிடமிருந்து ஆட்சிநிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் யாஹ்யாகான் இன்று முதல்தடவையாக ரேடியோவில் உரைநிகழ்த்தினார்.

## ... குறைக்கப் பட்டது

சென்னை, மார்ச் 26

தூக்குத்தண்டனை பெற்ற கைதிகளுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு தமிழ் நாடு அரசாங்கம் முன் வந்துள்ளது. மத்திய அரசாங்கம், காந்தி நூற்றாண்டு விழவை முன்னிட்டு கைதிகளின் தண்டனைவயக் குறைத்துக் கொள்ளும்படி கோரியிருந்தது.

சுப்பையாரெட்டியார் என்பவரது வீட்டில் நேற்றிரவு புகுந்த கள்வர் கோஷ்டி, சுப்பையா ரெட்டியாரைக் கத்தியால் குத்தியதாகவும். அவர் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. காயமுற்றவரின் நிலைமை மிக மோச...

## பாரதியாரின் வீட்டை அரசாங்கம் பொறுப்பேற்கும்

சென்னை, மார்ச் 26

எதிர்க் கட்சித் தலைவரின் ஊதியத்தை அதிகரிக்க ராஜ்ய அரசாங்கம் ஆலோசித்து வருவதாக இன்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி சட்டசபையில் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவருக்கு கார் வசதியும், வீட்டு வசதியும் செய்து கொடுக்க அரசாங்கம் ஆலோசிப்பதாகத் தெரிவித்த அவர், உப சபாநாயகருக்கும் இவ்வித வசதிகள் செய்து கொடுக்க சபை ஆலோசிப்பதாகத் தெரிவித்தார்.

எட்டியபுரத்திலுள்ள சுப்பிரமணிய பாரதியாரின் வீட்டை அரசாங்கம் பொறுப்பேற்கவிருப்பதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

## ஆங்கில பாடத்துக்கு விரைவில் உரிய இடம்

### கல்வி அமைச்சர் தகவல்

கம்பகா, வியாழன்

'விஞ்ஞானத்துக்கு ஆங்கிலம் முக்கியமாக வுள்ளதால், பாடத்திட்டத்தில் ஆங்கிலத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்படும், என்று கம்பகாவில் நேற்று நடைபெற்ற ஆங்கில ஆசிரியர்களின் ஒன்பதாவது மாநாட்டுக்கு கல்வி மந்திரி அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலலசேகரா அனுப்பி வைத்துள்ள செய்தியில் ஆங்கில பாடத்தை விஸ்தரிப்பதற்கு ஆங்கில ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும், அவர்களை வசதியிருக்கும் போது தனிப்பட்ட வகுப்புகளை நடத்தி ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சோவியத்

## யுத்தக் கப்பல்கள் எங்கே [illegible]சல்கின்றன?

### உலக அவதானிகள் கண்ணேட்டம்

லண்டன், மார்ச் 26

சோவியத் யுத்தக் கப்பல்கள் கூட்டமொன்று வட அத்திலாந்திக்குள் காணப்பட்டதாகவும், அவை தென் திசை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன ஆயினும் எங்கு செல்கின்றன என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

அந்த யுத்தக் கப்பல் கூட்டத்தில ஏவுகணைகள், நாசகாரிகள், உட்பட எட்டு நீர்மூழ்கிக் கப்பல்களும், வேறு கப்பல்களும் காணப்பட்டனவாம்.

## தமிழ் நாட்டில்

# மூன்று இடங்களில் விசைத்தறி ஆலைகள் நிறுவப்படும்

### இலங்கை அகதி[illegible]ளுக்[illegible]

திருச்சி, மார்ச் 26

இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று விசைத்தறி ஆலைகள் தொடங்குவது பற்றிமத்திய அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறது. ஒவ்வொரு ஆலையிலும் 250 விசைத்தறிகள் இருக்கும்.

அகதிகள் மறுவாழ்வு டைரக்டர் யூ. வைத்தியநாதன் திருச்சியில் இந்தத் தகவலை நிருபர்களிடம்கூறினார். இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளின் மறுவாழ்வுக்காக எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி அவர் விவரித்தார்.

இலங்கையிலிருந்து அகதிகளின் முதல் கோஷ்டி திரும்புவது குறித்து அதிகார பூர்வமான தகவல் அரசாங்கத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார், என்றாலும், முதல் கோஷ்டி இந்த வருடம் ஜூன் மாதம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்ருர். இது சம்பந்தமான ஆரம்ப வேலைகளுக்காக இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷனர் அலுவலகத்தில் முதல் காரியதரிசியாக மத்திய அரசாங்க அதிகாரி வி. கிருஷ்ணய்யர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 5.25 லட்சம் இலங்கை இந்தியர்கள் பதினைந்து ஆண்டுகளில் இந்தியாவுக்கு திரும்ப அனுப்பப்படுவார்கள். இந்த ஆண்டு வந்து சேரும் என்று எதிர்பார்கப்படுகின்ற முதல் கோஷ்டியில் சுமார் 7000 குடும்பங்கள் இருக்கும். ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் 5 பேர்கள் இருப்பார்கள்.

இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளில் சுமார் 50 சத விகிதத்தினர் திருச்சி ஜில்லாவில் மறுவாழ்வு அளிக்கப்படுவார்கள்.

புதுக்கோட்டையிலிருந்து பலமைல் தூரத்திலுள்ள திருவரக்குளத்தில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு காலனி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ராஜ்ய வன இலாகா இந்த 5000 ஏக்கரில் சுமார் 3000 ஏக்கரை ரெவின்யூ இலாகாவுக்கு வெகு விரைவில் கொடுக்கும் நிலத்தை சீர்திருத்தும் பணி உடனடியாக திருவரங்குளத்தில் ஆரம்பமாகும்.

இலங்கை அகதிகளில் சுமார் 90 சத விகிதம் பேர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருப்பார்கள் என்று வைத்தியநாதன் கூறினார்.

நீலகிரி ஜில்லாவில் கூடலூரில் சுமார் 3750 ஏக்கர் நிலப்பரப்பில் தோட்டங்களை தொடங்குவதற்காக ஒரு பெரும் திட்டத்தை தமிழ்நாடு அரசாங்கம் தயாரித்து வருகிறது.

கன்னியாகுமரி ஜில்லாவில் சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு ரப்பர் தோட்டம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகா மனகாதியில் ரூ. 47 லட்சம் செலவில் ஒரு கூட்டுறவு பால் பண்ணையை ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. அங்கு பல அகதிகள் குடியமர்த்தப்படுவார்கள். ஒவ்வொரு அகதிக் குடும்பத்திற்கும் 3 பசுக்கள் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் அகதிகள் மறுவாழ்வுக்கான பணியின் வேகம் குறித்து வைத்தியநாதன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

திருவரங்குளத்திற்கும், மாதூர் பார்மிய அகதி பள்ளிக்கும் வைத்தியநாதன் சென்ருர். அவருடன் திருச்சி மறுவாழ்வு துணைடைரக்டர் டி. ஆர். வெங்கட்ராமன் சென்ருர்.

# பிள்ளைகள் கல்வித்திறம் நாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலும்'

## கல்வி அதிகாரி கூறுகிருர்

அளவெட்டி, புதன்

''நாட்டின் வருங்கால செல்வங்கள் பிள்ளைகள். அவர்களின் கல்வித்திறம் தான் நாட்டின் வளர்ச்சிக்கு அடி கோலும். அவர்களின் வளர்ச்சியையும், நாட்டின் முன்னேற்றத்தையும் முன் வைத்துதான் இன்றைய கல்வித் திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது. இக்கல்வித் திட்டம் கல்வித் துறையில் ஓர் குழப்பமான சூழ்நிலையை உருவாக்குமென கருதுவது தவருனதாகும்.''

இவ்வாறு வடமாநிலக் கல்வி அதிகாரி திருமதி ஆர். பாமர் நேற்று மாலை தெல்லிப்பழை யூனியன்கல்லூரி கனிஷ்ட பிரிவு பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்புவிழாவில் திருமதிப்பாமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

உலகில் தனக்கு வேண்டும் என்றும், உன்னுடையது ஆனுல் எனக்கு வேண்டும் என வற்புறுத்துவதும் என்னுடையது நீகஷ்டப்படுவதால் தருகிறேன், என்றும் மூன்று விதமான மனிதர் வாழ்கின்றனர். ஆனுல் இவர்களுள் குழந்தைகளாகிய நீங்கள் மூன்ருவது மனித குணம் உள்ளவர்களாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

பெற்ருேரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்தை முன்வைத்து செயலாற்றி அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வாழ உதவ வேண்டும்.

போட்டிகளில் பங்கு பற்றும்மாணவர்களில்இவர்தமக்கும் பரிசு கிடைக்கவில்லை என சோர்வுற்றுவிட்டால் ஒரு காலமும் பரிசு கிடைக்காது போய்விடும். முயற்சி எடுத்தால்தான் அடுத்த போட்டியில் முதற் பரிசைத் தட்டிக்கொள்வதோடு நாட்டில் எத்தனையோ சாதனைகளையும் ஏற்படுத்த முடியும்.

அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தமது தலைமையுரையில் கூறியதாவது:

பாடசாலைகளைத் தரம் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திஞல் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா என்பன போன்ற நிகழ்ச்சிகள் பாடசாலைகளில் தடைப்படும் நிலை உருவாக்கும். ஏனெனில் தற்போது இந்நிகழ்ச்சிகள் நடத்த அரசாங்கம் பண உதவி செய்யவில்லை. மாணவரின் பணமே இதற்கு உதவுகிறது. இந்நிலையில் பாடசாலைகளை தரம் பிரிப்பது மூலம் மாணவர் தொகை குறையும். இதனல் வசூல் குறைவதால் இவ்வித நிகழ்ச்சிகள் தடைப்படும். எனவே இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

மேற்படி கல்லூரி கனிஷ்ட பிரிவு அதிபர் திரு. கதிரையாண்டி வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## கும்பாபிஷேக விழா

யாழ்ப்பாணம், வியா.

கலட்டி நரிக்குன்று பெரியதம்பிரான் கோவில் கும்பாபிஷேக தினம் இன்று கொண்டாடப் பட வுள்ளது.

பகல் அன்னதானமும் ''பக்த நந்தனர்'' என்னும் பொருள் பற்றி செல்வி ராதா சோமசேகரத்தின் கதாப் பிரசங்கமும் நிகழும்.

## இடமாற்றத்தால் பாதிப்பு?

பருத்தித்துறை, புதன்

தவணை நடுப்பகுதியில் ஆசிரிறர் இடமாற்றங்கள் சில நடைபெற்றுள்ளதால் சில பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில் இவ்வாண்டு நடுப்பகுதியில் நடக்க விருக்கும் பல்வேறு போட்டிகளுக்குமான ஆயத்தங்கள் ஸ்தம்பித்து விட்டன.

க. பொ. த பரீட்சைகளுக்கு பிரதம மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டவர்களுக்கு வேறு நிலையங்கள் மாற்றிக் கொடுக்கப் பட வேண்டிய அவசியமும் ஏற்படடுள்ளதாம்.

## நாய் கடிக்கு சிறுவன் பலி

வல்வெட்டித்துறை, வியா.

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியில் கே. இராசதுரை என்னும் 15 வயதுச் சிறுவன் நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்தான். சிறுவனின் வருத்தம் வரவர மோசமாக இருந்தபடியால் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு இறந்து அவர் மரணமானுர். பிரேத பரிசோதனை டாக்டர் திரு. கதிர்காமத்தம்பியினுல் செய்யப்பட்டு மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் விசாரணையை நடத்தினுர்.

இறந்த நபர் சிலகாலத்துக்கு முன்னர் விசர்நாய் கடித்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

---

சுழிபுரம், புதன்

சுழிபுரம் பகுதியிலுள்ள அநேகர் சின்னம்மையினுல் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக சுழிபுரம் பிரதான வீதியைச் சேர்ந்த பகுதியில் வாழ்பவர்கள் அதிகமாக இந்நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### தேவை

கைத்தறி நெசவில் பயிற்சியுள்ள பெண் நெசவாளர்கள் தேவை. டொபியில் வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. விடுதி வசதியும் உண்டு. விபரங்களுக்கு: சுதாஸ் நெசவு நிலையம், கொலனி வீதி, அச்சுவேலி. 790

### விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கு உவந்த காணி - யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கருகாமையில் ஆஸ்பத்திரி, பெரிய கடை, சின்னக்கடை, பள்ளிக்கூடங்கள் ஆலயங்களுக்கு மத்தியில் உள்ளது. பேர்ச் ஒன்று 1800 ரூபாவுக்குமேல். தொடர்பு கொள்ளவும்: M. I. இராசரத்தினம் ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி. 720

### ஏல விற்பனவு

தொண்டமனாறு உடுப்பிட்டி வீதியில் 55 பரப்புக் கொண்ட ஆதனம் ஒவ்வொன்றும் 5 பரப்புக் கொண்ட துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு 9-4-1969 காலை 9 மணிக்கு விற்கப்படும்.

S, இரத்தினசபாபதி J, P.
கோண்டாவில்.

1245

### செல்வச்சந்நிதி சங்காபிஷேகம்

வல்வெட்டித்துறை, திங். தொண்டமானாறு செல்சந்நிதிகோவில் சகஸ்ரமகாசங்காபிஷேகம் அடுத்தமாதம் முதலாந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். அன்றிரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

ராஜா (யாழ்ப்பாணம்) 73வது தினம்
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - கல்பனு நடித்த
மதருஸ் To பாண்டிச்சேரி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஶ்ரீ நடித்த
அனுபவி ராஜா அனுபவி

இணுவில்
ஶ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - எல். விஜயலக்ஷ்மி நடித்த
சபாஷ் தம்பி

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Pre-Poya, Poya 10-30 a.m.
John Wyne, Dean Martin
in
SONS OF KACIELDER

## கணவனுடன் போக மறுத்த பெண்

காங்கேசன்துறை, புதன்

வவனியாவிலிருந்து தமது கணவனுக்குத் தெரியாமல் ஓர் இளைஞனுடன் புறப்பட்டு வந்த ஒரு பெண், காங்கேசன்துறையிலுள்ள படமாளிகை ஒன்றில் தமது கணவனிடம் அகப்பட்டுக் கொண்ட சம்பவம் ஒன்று இங்கு நேற்று நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. தமது மனைவியை இளைஞனுடன் கண்ட கணவன் உடனடியாக பொலிசாருக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் அந்த ஜோடியைக் கைதுசெய்து விசாரணை செய்தனர்.

நெடுங்குளத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான அந்தப் பெண் தாம் கூடி வந்த இளைஞனுடனேயே போகப்போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் அந்தஜோடியை விடுதலை செய்தனர்.

### உற்பத்தியில் வடமராட்சியின்வெற்றி

உடுப்பிட்டி, புதன்

கடந்த வருடம் வடமராட்சிப் பகுதியில் நெல் உற்பத்தியில் அமோக வெற்றி கண்டுள்ளதாகக்

## சைக்கிள் திருடியவருக்கு 9 மாதம் சிறை

வல்வெட்டித்துறை, புதன்

அச்சுவேலியைசேர்ந்த செல்லத்துரை என்பவர் கரவெட்டியைச் சேர்ந்த எஸ். குலவீரசிங்கம் என்பவருடைய ரூபா 450 பெறுமதியான சைக்கிளைக் கடந்த தை மாதம் 15-ந் திகதி களவாடியதாகக் குற்றம் சாட்டி பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே, விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டும், அவர் 67-ம் ஆண்டு மணிக்கூடு களவாடிய குற்றத்திற்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டதென்றும் 68-ம் ஆண்டு கைக்கடிகாரம் களவாடியதற்கான குற்றத்திற்கு 6 மாத சிறைத்தண்டனை பெற்றுள்ளாரென்றும் எடுத்துக் காட்டியபோது எதிரி அவற்றை ஒப்புக்கொள்ளவே இப்போதைய குற்றத்திற்காக 9 மாதச் சிறைத்தண்டனை வழங்குனர்.

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரி நிலை

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் வாட்டுகளில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெறும் நோயாளர் படுக்கைவசதியின்றி நிலத்திலே படுத்துச் சிகிச்சை பெறுகின்றனர். நல்ல தலையணைகளோ, சிற்றுகளோ, பாய்களோ கிடையாது, ஒருபுறம் மூட்டைப் பூச்சிமறுபுறம் நுளம்பு இவற்றாலும் இவர்கள் கஷ்டமடைகின்றனர்.

0 0 0

### பிரிவுபசாரம்

கொக்கிளாய் கிராம சேவையாளராக விருந்து முள்ளிவாய்க்காலுக்கு இடமாற்றலாகிச்செல்லும் திரு ச. பாலசிங்கத்துக்கு அவ்வூர் மக்கள் பிரிவுபசாரம் ஒன்றை நடாத்தினர்.

0 0 0

### கடும் வரட்சி

சென்ற பல மாதங்களாக மழையின்மையால் முல்லைத்தீவுப் பகுதியில் கடும் வரட்சி நிலவுகின்றது. இதனால் குளம், குட்டைகள் யாவும் வற்றி வறண்டு காட்சியளிக்கின்றன. கால்நடைகள் நீரின்றிக் கஷ்டமடைகின்றன. கிணறுகளில் நாளுக்கு நாள் நீர்வற்றிக் கொண்டு போகின்றது.

## இன்றைய

வடஇலங்கை சங்கீதசபை

## சங்கீதப் பரீட்சை முடிவுகள்

(முன்னைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், வியாழன்

வடஇலங்கை சங்கீதசபையினரால் நடாத்தப்பட்ட 1968-ம் வருட சங்கீத பரீட்சைகளின் முடிவுவிபரம்,

### யாழ்ப்பாணம்

3-ம் பகுதி

சாதாரணபிரிவு: வாய்ப்பாட்டு

வீணை: செ. ரங்கநாயகி, இ. ராஜினி, இ. கிருஷ்ணு, நே. புஷ்பரஞ்சிதம், இ. செல்வராணி, ஆ. சிறீதேவி.

வயலின்: இ. நளினி, ந செல்வராணி, பா. சாந்தா, செ. நித்தியகல்யாணி, எ. இவான்ஜலின் விமலாதேவி, ந. கோபாலகிருஷ்ணன், சி. சுஹாசினி.

### சாவகச்சேரி

க சாரதாதேவி, சி சந்திரலேகா, பொ சுகிர்தாதேவி, சி வாசுகிதேவி, சு யோகாம்பிகை, செ கமலேஸ்வரி, கா சரோஜினிதேவி, சி கோமதி, த விஜயலட்சுமி, சு அம்பிகை, செ புஷ்பநிதி, செ சொருபராணி, கு விமலாதேவி, க விஜயலட்சுமி,

வயலின்: சு. யோகாம்பிகை.

### கோப்பாய்

வாய்ப்பாடு:-

அ சற்குணமலர், க பாலசரஸ்வதி, சி மேரிலீலா, சு ஸ்கந்தராணி, வ ராஜமலர் சு யோகமணி.

வயலின்: அருந்திராதேவ, சு விமலேஸ்வரி.

### பருத்தித்துறை

வாய்ப்பாட்டு: தி சந்திரலேகா இ பிரேஜயந்தி, இ யசோதா, தி கஜலச்சுமி, ந மாலினி.

### கொழும்பு

வாய்ப்பபாட்டு: மு நவரத்தினராசா, பா சாந்தினி, செ அம்பிகா, ச சரோஜிதேவி, ச, ராகினி, இ பங்கயலோஜனி, மு ஜயதேவி, அ ராஜினி, (வாய்பாட்டு வயலின்) சு சிவரானி, ர ஆனந்தவல்லி, சி நகுலேஸ்வரி.

வீணை: த. யோகமலர், இ. ஜயந்தி, வே. பரமேஸ்வரிதேவி.

வயலின்: ச. காஞ்சனு,

புல்லாங்குழல்: தா. நிமலராஜ்.

### திருகோணமலை

வாய்ப்பாட்டு: சு. புஸ்பராணி, க. சிவகெங்கா, ம. சத்தியராணி, ந. கீதசாந்தி, செ. ஜெயராஜகுலமணி.

வயலின்: செ. பாலேஸ்ரி.

4-ம் பகுதி

### யாழ்ப்பாணம்

சாதாரண பிரிவு

இ. சௌதாமினி, சு அம்பிகை, ந இராஜேஸ்வரி, சி செல்வமணி, சு சிதம்பரேஸ்வரி. க சுசீலாதேவி, சு பவானிதேவி, க முத்துமாரி, சி நாகேஸ்வரி, ரா ரஞ்சனு, ப ஶ்ரீ ரஞ்சனுதேவி, நு நவஞானம், செ புவனும்பிகை, வ பிளசிடா, இ தயாளினி, சி நகுலேஸ்வரி.

வீணை: சு. ருக்மணி

### மல்லாகம்

வி சிவதாசன், வி சிவஞானசேகரம், க தியாகேஸ்வரி, அ இராஜேஸ்வரி வி சந்திராதேவி, நா கலாதேவி, இ கௌதமி, கு கௌரிமனோகரி, ந சாந்தினிதேவி, இ மீனலோஜனி அ தவமணிதேவன், செ பரஞ்சோதி, சு சுசீலாவதி, சி சுகுணராணி. வே சரோஜா,

வீணை: க. பத்மினிதேவி,

வயலின், செ. ஷாமினி வசந்தா.

### சாவகச்சேரி

க செல்வராணி, க பரமேஸ்வரி, மா வரகுகராணி, மு புவனேஸ்வரி, மா வனிதாமணி, க சரோஜினிதேவி.

சாதாரண பிரிவு

பொ செல்வராசா, பே கமலாதேவி, செ செல்லம்மா, ச நல்லம்மா, ஆ இராஜபூபதி, கு நவமணி, சோ பவானி சி கமலாதேவி, ச ரஞ்சிதநாயகி, பூ தவமணி க பாலகுமாரன், இ சந்திராதேவி, சு கிரிஜரமணி, க சரோஜினிதேவி, தி தயாநிதி, மு அமிர்தரஞ்சிதம், வ ஞானமணி, அ திலகராணி, ம நிர்மலாதேவி

### பருத்தித்துறை

பொ அஞ்சுதமலர், நா செல்வராணி

### கொழும்பு

தி சாநதாதேவி, சு சுபத்திரா, ந வாசுகி, இ சிவகுமாரி.

### திருக்கோணமலை

வி சூரியபிரபா, க விமலாதேவி, இ விஜயகுமாரி ச இராஜேஸ்வரி.

5-ம் பகுதி

### யாழ்ப்பாணம்

சாதாரண பிரிவி

கு யசோதாதேவி

### மல்லாகம்

சு இராசலட்சுமி, இ பிரேமாவது, இ அருந்ததி, பொ ஶ்ரீவாமதேவா.

வயலின்: க விஜயலபசுமி.

### பருத்தித்துறை

வயலின்: ந சுசில தேவி.

### கொழும்பு

வாய்ப்பாட்டு, வயலின் வி வத்சலாதேவி.

### திருக்கோணமலை

சி இராஜகுமாரி வயலின் ச ஜெயலட்மி.

(தொடரும்)

## 'மயக்கம்'

உடுப்பிட்டி, புதன்

விவசாயப் பகுதி குறைந்த நிலத்தில் பயிரிடடுக் கூடிய நிலத்தில் அறுவடை செய்த சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளது. கடபூது வில் 256 பரப்பு விஸ்தீரணமுள்ள வயலில் நெல் பயிரிடப்பட்டது. ஆனல் 360 பரப்பு விஸ்தீரணமுள்ள வயலில் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாம். விவசாயப் பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபர அறிக்கை யொன்றிலேயே இம் 'மயக்கம்' காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உற்பத்தியில் வடமராட்சியின்வெற்றி

உடுப்பிட்டி, புதன்

கடந்த வருடம் வடமராட்சிப் பகுதியில் நெல் உற்பத்தியில் அமோக வெற்றி கண்டுள்ளதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. 1967 - 68-ம் ஆண்டு வடமராட்சியில் 83132 புசல் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகப் பயிர்ச் செய்கைக்குழு உத்தியோகத்தர் திரு. சின்னத்தம்பி தெரிவித்தார்.



JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Pre-Poya, Poya 10-30 a.m.
John Wyne, Dean Martin
in
SONS OF KACIELDER

REGAL at Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
James Stewart
Richard Attenborough
in
THE FLIGHT OF THE PHOENIX

ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா
நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)


சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
எஸ். எஸ். வாசன் அவர்களால்
ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்ட சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு
கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா
ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று
வதையும் பார்க்கலாம்!


காட்சியளிக்கின்றன. கால் நடைகள் நீரின்றிக் கஷ்டமடைகின்றன. கிணறுகளில் நாளுக்கு நாள் நீர்வற்றிக் கொண்டு போகின்றது.

## இன்றைய பலன்

27-3-69
வியாழக்கிழமை

திதி- நவமி பகல் 9-26 மேல் தசமி.

நட்சத்திரம்- புனர்பூசம் இரவு 1-01 மேல் பூசம்.

ராகுகாலம்- 1-44 — 3-14.

சுபநேரம்- 7-44 — 9-14.

இன்று பிறந்தவர்களுக்கு— ஏமாற்றங்களுக்கு மத்தியில் சில முன்னேற்றங்கள் உண்டு. சில அருமையான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடலாம். கோபத்தை அடக்கிக்கொண்டால் குடும்பத்தில் அமைதி நிலவும். புதுத்தொழில் புரிவோர்க்கு இது புனிதமான ஆண்டாகும்.

மேஷம்- நம்பிக்கை பலிதம், நலமும் சேரும்.
ரிஷபம்- கனதனமுண்டு, காரியத்தில் கண் வை.
மிதுனம்- கூரம் பாயினும், குறிதவறிவிடும்.
கடகம்- தாய்ப்பாசம் உண்டு, தருமசிந்தை.
சிமமம்- ஆற்றலுக்கு மதிப்பு, அறிவுரை கிடைக்கும்.
கன்னி- ஆணவப்பேச்சு, ஆபத்தில் முடியும்.
துலாம்- காத்திருக்கும் கண்களுக்கு களிப்பூட்டும் விருந்து.
விருச்சிகம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.
தனுசு- குறுக்குவழிச் சம்பத்து கொண்டுவரும் ஆபத்து.
மகரம்- களஸ்திர வாழ்வு, கரும்பாக இனிக்கும்.
கும்பம்- எண்ணித் துணிக எதிரிகள் உண்டு.
மீனம்- பாசவெள்ளம், பரோபகாரச்சிந்தை.

—சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி பிரகடனம்

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த இயலாமல் அயூப்கான் பதவிவிலகினார்

### சேனாதிபதி யாஹ்யாகான் கையில் நிர்வாகக்கடிவாளம்

ராவல்பிண்டி, மார்ச் 26

பாகிஸ்தானில் அதிபர் அயூப்கான் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ராணுவச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ராணுவத்தளபதி ஜெனரல் ஈ. எம். யாஹ்யாகான் நிர்வாகப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு ராணுவச்சட்டத்தின் கீழ் 25 விதிகளையும், 4 உத்தரவுகளையும் பிறப்பித்துள்ளார்.

அரசியல் சாஸனம் அகற்றப்பட்டு ஆட்சிமன்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. அயூப் ஆட்சியின் கீழ் இயங்கிய மந்திரிசபை கலைக்கப்பட்டது இரு மாகாணக் கவர்னர்களும் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். நாடு இரு நிர்வாகப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது

நாடு முழுவதும் அவசரமாக ராணுவ நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன. ராணுவ ஆட்சிக்கு எதிராக செயல்படுகிறவர்களையும் பேசுகிறவர்களையும் விசாரித்துத் தண்டிக்கும் அதிகாரங்கள் இந்த நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



பதினொரு ஆண்டுகளுக்கு முன் இரத்தம் சிந்தாமல் புரட்சி மூலம் பாகிஸ்தானில் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய பீல்ட் மார்ஷல் அயூப்கான் நாட்டில் ஏற்பட்ட படுமோசமான அராஜக நிலைமையையும், இரத்தக்களரியையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் ஆட்சிப்பொறுப்பை மேஜர் ஜெனரல் ஈ. எம். யாஹ்யாகானிடம் நேற்று ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

அயூப்கான் ஆட்சியின் சமீப காலத்தில் வெடித்த எதிர்ப்புப் போராட்டங்களை முதலில் தீவிரமான சட்ட நடவடிக்கைகளின் மூலம் அடக்க முற்பட்ட அவர் பின்னர் எதிர்க்கட்சிகளின் கோஷங்களுக்கு இணங்கி பல சலுகைகளைக் கொடுத்தார். கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள், சுல்பிகார் அலி பூட்டோ, சேக் முஜிபுர் ரகுமான் போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்தார். அரசியல் சதி வழக்குகளை வாபஸ் பெற்றார். அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்று அறிவித்தார், மாணவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்தார்

எதிர்க்கட்சித் தலைவர்களை வட்டமேஜை மாநாட்டுக்கு நாயக முறைப்படி மக்கள் ஆட்சியை ஏற்படுத்தவும் ஒப்புக்கொண்டார் அதற்குப் பிறகு இரு மாகாணங்களினிம்கவர்னர்களை மாற்றிப் புதியவர்களை அந்தப் பதவிகளுக்கு நியமித்தார். ஆனால் எதிர் கட்சியினரின் போராட்டம் அதிகரித்துக் கொண்டு போனதேயன்றிக் குறையவில்லை.

நாட்டின் பல பகுதிகளிலும் வேலைநிறுத்தமும், ஹர்த்தாலையும்மாணவர் குழப்பதையும்தொடர்ந்துகிழக்குப் பாகிஸ்தானில் அராஜகம் தலைவிரித்தாடியது. கொலை கொள்ளை, சூறையாடல், கொள்ளி வைப்புச் சம்பவங்கள் சர்வசாதாரணமாகி விட்டன. அதிகாரிகள் படுமோசமாகத் தாக்கப்பட்டனர் ஆயிரக்கணக்கான வீடுகள் சாம்பராக்கப்பட்டன. தெருக்களில் அயூப் ஆதரவாளர்களும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் ஆயுதங்களோடுமோதிக்கொண்டனர் துப்பாக்கிப் பிரயோகமும் கொலைகளும் தினே தினே அதிகரித்தன.

அயூப் விடுத்த எச்சரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன. இறுதியில் நிலைமையைக் கட்டுப்படுத்த இனி மேலும் முடியாத நிலைமையில் அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்து ஆட்சிப் பொறுப்பை

## திரு சுக்லா ம. பிரதேஷ் முதலமைச்சர்

புதுடில்லி மார்ச் 26

மத்திய பிரதேசத்தில் புதிய முதலமைச்சராக திரு சாம்சரன்சுக்லா இன்று பதவி ஏற்றுக்கொள்ள விருக்கிறார்.

மத்திய பிரதேஷ் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து திரு டி. பி. மிஸ்ரா ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து திரு சுக்லா அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## இந்திய மந்திரி ரகுராமையா ராஜினாமா

புதுடில்லி மார்ச் 26

இந்திய மத்திய அரசின் அமைச்சர்களில் ஒருவரான திரு ரகுராமையாவும் இரண்டு துணை கொறடாக்களும் தமது பதவிகளை ராஜினாமா செய்திருகிறார்கள்.

அஸாம் மாகாணத்தில் சுய நிர்ணயராஜ்யமொன்றை அமைப்பதற்கு மசோதா லோக்சபையில் உரிய வாக்கு பலத்துடன் நிறைவேறாமல் போனதே இதற்கு காரணம். இந்து மசோதாவுக்கு உரிய வாக்குபலம் கிடைக்கும் என்று இவர்கள் முன்னர் கணக்கிட்டிருந்தார்களாம். மசோதா மீண்டும் சபையில் தாக்கல் செய்யப்படும் என்று அறிவிக்கப்படடிருக்கின்றது.

## ‘பீடிவாங்கச் சென்றபோது கத்தியால் குத்தினார்’

வல்வெட்டித்துறை, புதன்

சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 6-30 மணியளவில் எதிரிக்கும் எனக்கும் வெடிகொளுத்தியது சம்பந்தமாக வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பின்னர் மாலை 7-15 மணியளவில் நான் கடைக்கு பீடிவாங்கச் சென்றபோது எதிரி எனக்கு பலமுறை கத்தியால் குத்தினார் எனவல்வெட்டித்துறையைச் சேர்ந்த தொழிலாளியான அருணாசலம் அப்பாச்சாமியென்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவனடியார் பாலசுப்பிரமணியமென்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த அருணாசலம் அப்பாச்சாமி என்பவரைக் கடந்த வருடம் ஐப்பசி மாதம் 21-ந் திகதி கத்தியால் குத்தி படுகாயம் உண்டுபண்ணியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றஞ்சாட்டி இவ் வழக்கு தொடரப்பட்டது.

அப்பாச்சாமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எதிரியின்வீடு எனது வீட்டுக்கு முன்புறத்தில் உள்ளது. சம்பவதினம் வெடிகொளுத்துவது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தபோதும் எதிரி மண்வெட்டி கொண்டுவந்தார். பிறகு 7-15 மணிக்கு நடராசா கடைக்கு பீடி வாங்கப் போனேன். அப்போது எதிரி கத்தியால்எனக்கு பலமுறை மார்பிலும் முதுகிலும் குத்தினார். எனது மைத்துனரைக் கண்டதும் எதிரி ஓட்டம் எடுத்தார். அதன்பின்னர் நான் பொலிஸ்நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

எதிரியான சிவனடியார் பாலசுப்பிரமணியம்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

வழக்காளியான அப்பாச்சாமிக்கு கத்தியால் குத்தினேன். அவர்வீட்டில்கடந்த ஒன்றரைமாதங்களுக்கு முன் வெள்ளி பிடிபட்டது. வெள்ளிபிடிப்பதற்குரிய இரகசியத் தகவலை நான்தான் கொடுத்தேன்எனச் சொல்லி எதிரி பல தடவைகளிலும் என்னைக்கண்ட நேரங்களில் அடிப்பார். சம்பவ தினத்தன்றும் எனக்கு அவர் அடித்து கத்தியால் குத்த முற்பட்ட சமயம் அவருடைய கத்தியைப்பறித்து அவருக்கு நானே குத்தினேன். குத்தும்போது என்னை அறியாமலேயே குத்தினேன். அதன்பின்னர் நேரடியாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு கொடுத்தேன்.


அ. சிவானந்தம், சார்ஜண்ட் பீட்டர் ஆகியோரும் சாட்சியமளித்தனர்

மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டுதீர்ப்புக்கூறுவதை இம்மாதம் 31-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## துருப்புகள் திருப்புகின்றன

லண்டன் மார்ச் 26

கரிபியன் கடலிலுள்ள அங்குய்லா தீவுக்கு பிரிட்டன் அனுப்பியிருந்த பாரா துருப்புக்களை கட்டம் கட்டமாக திருப்பி அழைத்துக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றது. முதல் கட்டத்தில் 40 பேர் திரும்பிவருவார்கள். அதேசமயம் அங்குய்லாவின் நிர்மாண வேலைகளைத் தொடங்குவதற்காக இராணுவ எஞ்சினியர்கள் போகவிருக்கிறார்கள்



### மீனு செந்தில்நாதன்

மராமத்து இன்ஸ்பெக்டர் டி. செந்தில்நாதனின் புதல்வியும், கொழும்பு அட்வகேட் தில்லைநாதன், யாழ்டன் ஸ்ரோர் உரிமையாளர் கே. எஸ். நடராசா இவர்களின் அருமைப் பேர்த்தியுமான இத்தெய்வீகக் குழந்தை (3 வயது 9 மாதம்) இம்மாதம் 7-ந் திகதி காலமானார். இன்று காரைநகரில் அந்தியேட்டி பூசை.

## விபுலானந்தர் ஞாபக நூல்நிலையம்

கல்முனை புதன்

சுவாமி விபுலானந்தர் பிறந்த ஊராகிய காரைதீவிலே அவரது நினைவாக மத்திய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது திரு. எம். திருச்செல்வம் உள்ளூராட்சி மந்திரியாக இருந்தபோது அவரால்அடிக்கல் நாட்டப்பட்ட இக் கட்டிடத்திற்கு வெகு விரைவில் திறப்புவிழா நடத்தப்படவிருக்கிறது.

சுவாமி விபுலானந்தர் மறைந்து இருபத்திரண்டு வருடங்களுக்குப்பின்பு தான் அவருக்கு சிலை எழுப்ப பாக்கியம் கிடைத்ததெனகாரைதீவு கிராமசபைத் தலைவர் திரு மா. பரசுராமன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய நூல்நிலையத்தின் முன்னால் விபுலானந்தரின் ஆறடி உயரமான முழு உருவச் சிலையும் நிறுவப்படும்.

## தமிழ்ப்பட ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள கஷ்டம் கருணாநிதி கவலை

சென்னை, மார்ச் 26

இலங்கைக்கு தமிழ்ப்படங்கள் ஏற்றுமதியாவதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள்பற்றி

மலேசியா [illegible] தமிழ் [illegible] பட [illegible] குறைந்துவிட்டது. மைசூரிலும் தமிழ்ப்பட சந்தை[illegible]

[illegible], மனமார பாரா[illegible] அவர்கள் முயற்சியை வரவேற்றுவாழ்த்துகிறேன். ‘எதிர்நீச்சல்’ படத்திற்

## சகோதரியை மோசடி செய்தார்

குரும்பசிட்டி, புதன்

சகோதரியிடமிருந்து ரூ. 485 பெறுமதி வாய்ந்த சங்கிலியை நம்பிக்கை மோசடி செய்ததாக சகோ

## புதிய ஜே. பி.

பருத்தித்துறை, புதன்

கரவெட்டி கிழக்குப் பகுதிக்குப் புதிய சமாதான நீதிபதியாக முன்னாள் கிராம

## இளைஞரின் திருப்பணி

யாழ்ப்பாணம், வியா

ஆனைப்பந்தி நாவலர்வீதியில் அமைந்திருக்கும் வயிரவ கோவில் ஆனைப்பந்தி இந்து வாலிப முன்னணியினரால் புனருத்தாரணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

...யல் சதி வழக்குகளை வாபஸ் பெற்ருர். அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்று அறிவித்தார், மாணவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர்களை வட்டமேஜை மகாநாட்டுக்கு அழைத்துப் பேசி வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கவும் ஜன... அதிகரித்தன.

அயூப் விடுத்த எச்சரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன. இறுதியில் நிலைமையைக் கட்டுபடுத்த இனிமேலும் முடியாத நிலைமையில் அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்து ஆட்சிப் பொறுப்பை தளபதிஜெனரல் யாஹ்யாகானிடம ஒப்படைத்துவிட்டார்.

## மூன்று மாத லீவில் அயூப் போகிருர்

ஆட்சியை ராணுவத் தளபதியிடம் ஒப்படைத்துவிட்ட அயூப்கான் மூன்று மாத லீவில் போகிருர். அவரால் நியமிக்கப்பட்ட கவர்னர்களும் பதவிகளை இழந்துவிட்டார்கள். பதவியிலிருந்து விலகியபின் அயூப் நேற்று நாட்டுமக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''நாட்டின் பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு வருகிறது. நிலையைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போய்விட்டதால் நாடு சின்னுபின்னமாவதைத் தடுப்பதற்காக ராணுவத் தளபதியிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கின்றேன். எதிர்க்கட்சியினருக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டன. வட்டமேசை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டேன். அதே சமயம் எதிர்க்கட்சியினரின் சுயாதிபத்திய உரிமை கோரிக்கையை மாத்திரம் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இப்போதைய சூழ்நிலையில் தேசிய சட்டசபையைக் கூட்டுவது சாத்தியமில்லை அப்படி - கூட்டினுல் இரத்தக்களரி ஏற்படும்.''

## அவசர ராணுவ நீதிமன்றங்கள்

நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் ராணுவச் சட்டத்தை அமுலாக்கி தேசிய சட்டசபையைக் கலைத்துவிட்டார் ஜெனரல் யாஹ்யாகான். நாட்டை இரு நிர்வாகப் பிரிவுகளாக்கியுள்ளார். ராணுவச் சட்டத்தில் 25 விதிகளையும் 4 உத்தரவுகளையும்பிறப்பித்தார் இவைகளின்கீழ் அவசர ராணுவ நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன. இந்த இராணுவ நீதிமன்றங்கள்ஆட்சிக்கு எதிரான குற்றவாளிகளை விசாரித்துத் தண்டனை வழங்கும்,

வேலைநிறுத்தங்கள், மாணவர் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் யாவும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டுள்ளன. ஆயுதங்கள் வைத்திருப்போர் 24 மணி நேரத்துக்குள் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளன. ராணுவச்சட்டம் அமுலுக்கு வருமுன் அமுலில் இருந்த ராணுவச் சட்டப் பிரிவுகள் தொடர்ந்து அமுலில் இருக்கும், நீதிமன்றங்களும், நீதிபதிகளும் தொடர்ந்து கடமையாற்றுவர்.

### லண்டனில் மாணவர் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதையொட்டி லண்டனிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன் காரியாலயத்தில் சுமார் 30 பாகிஸ்தானிய மாணவர்கள் உள்ளே புகுந்து கலாட்டா செய்தார்கள் இவர்களை அப்புறப்படுத்தப் பொலிசார் அழைக்கப்பட்டனர்.

## சிரமதான வேலைகள்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சிப்பகுதியின் பல்வேறு கிராமங்களிலும் சிரமதான வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட விருக்கின்றன. இதற்கான முயற்சிகளில் கிராமசேவையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இச்சிரமதான இயக்கங்களில் தொண்டர்கள் பங்குபற்றுவர்.

## கருணாநிதி கவலை

சென்னை, மார்ச் 26

இலங்கைக்கு தமிழ்ப்படங்கள் ஏற்றுமதியாவதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள்பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி கவலை தெரிவித்தார். தமிழ்ப்படங்களை சிக்கனமாக எடுக்கும்படி அவர் தயாரிப்பாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

'எதிர்நீச்சல்' என்ற படத்தின் 100வது நாள் விழாவில் கலந்துகொண்டு கருணாநிதி பேசினுர். அவர் கூறியதாவது:

தமிழ்ப்படம் எடுக்க தயாரிப்பாளர்கள் அஞ்சுகிருர்கள் இலங்கைத் தீவுக்கு நம் படங்கள் செல்ல எத்தனையோ தடைகள்! அந்த அரசுதான் விலையை கூட நிர்ணயம் செய்கிறது.

மலையாள நாட்டில் தமிழ் பட மார்க்கெட்வெகுவாகக் குறைந்துவிட்டது. மைசூரிலும் தமிழ்ப்பட சந்தை குறைந்துவிட்டது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் சுற்றிச் சுற்றி ஓடி அடுத்த படம் எடுக்கக்கூடிய அளவுக்கு லாபத்தை தருமா என்ற கேள்வி பிறந்துள்ளது.

ஆகவே படத்தை சிக்கனமாக எடுத்துத்தீரவேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்த அளவில் மிகச்சிக்கனமாக எதிர்நீச்சலை தயாரித்து வெற்றி கண்டிருப்பது வரப்போகிற படங்களுக்கு முன்னேடி ஆகும்! கலைமகளுடைய வைர கிரீடத்தில் நண்பர்கள் ஒரு கல்பதித்திருக்கிருர்கள். அவர்களை வாயார, மனமார பாராட்டி அவர்கள் முயற்சியை வரவேற்றுவாழ்த்துகிறேன்.

'எதிர்நீச்சல்' படத்திற்கான பெயரை நாடகத்திற்கு வைத்தபோதே அதை எண்ணிஎண்ணிப் பாராட்டியவன் நான்! ஒரு முறை இந்த நாடகத்தைக் கண்டிருக்கிறேன், படம் பார்க்க நேரமில்லை; எதிர் நீச்சல் என்ற தலைப்பைப் பார்த்ததுமே எனக்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. காரணம் நானே வாழ்வில் ஆரம்பத்திலிருந்தே எதிர்நீச்சல்போட்டவன்! ஆகவே இந்த தலைப்பு வெகுவாகக் கவர்ந்தது.

தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட 100 நாள் விழாக்கள் அடிக்கடி நடக்கவேண்டும்! அத்தனை படங்களும் 100 நாட்கள் ஓடுமென்ற பெருமை பெற்ருகவேண்டும்.

நண்பர் ஏ எல். சீனிவாசன் பேசும்போது என் நினைவை அவர் எங்கேயோ இழுத்துச் சென்றுவிட்டார். தணிக்கைக்குழுவினர் ஆபாசக்காட்சிகளை வெட்டவில்லை! ஒழுங்காக நடைபெறவில்லை என்ருர்.

நான் நீண்ட நாட்களாக படத்துறையில் இருந்தவன்! அப்போது தூங்குகிறநேரத்தில்கூட திடுக்கிட்டு இருக்கிறேன். நான் தீட்டிய வசனம், படத்தின் காட்சிகள் தணிக்கைக்கு பலியாகி உள்ளன.

நன்றி தெரிவித்து நடிகர் நாகேஷ் பேசியதாவது:

''கதை பிறப்பது என்பது வீட்டில் மங்களகரமான நேரத்தில் பெண் பிறப்பதுபோல்! கதை, நாடகமாவது அவள் ''பெரியவள்'' ஆவது போல்!

படம் வெளிவருவது அவள்திருமணமாகி புக்ககம் போவது போலவும், படம் வெளிநாடுகளுக்கு செல்வது அவள் தேன்நிலவுக்கு செல்வது போலவும் ஆகும்.

தீப்பெட்டி போன்றவர் டைரக்டர் கே. பாலச்சந்தர். நான் அதில் உள்ள குச்சி போன்றவன்!

முதல் அமைச்சர் கருணாநிதியிடமிருந்து பரிசு வாங்கினேன்! ஆனுல், அறிஞர் அண்ணுவின் கையிலிருந்து இந்த கேடயத்தை வாங்கிய உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது! அண்ணு மோதிரம் கலைஞரின் கையில் இருக்கிறதே!


பூங்காவில் பூவாடும் முன் அவசர அவசரமாக பறிப்பது எப்படியோ அப்படித்தான் சினிமா மார்க்கெட் இருக்கும்போது சம்பாதித்தால் தான் உண்டு.

## தனிப்பட்ட பேச்சுமூலம் வியட்னுமில் அமைதி

### அதிபர் நிக்ஸன்நம்பிக்கை

வாஷிங்டன், மார்ச் 26

வியட்னுமில் தனிப்பட்ட பேச்சுவார்த்தை மூலம் தான் அமைதி ஏற்பட முடியும் என்று அதிபர் நிக்ஸன் அறிவித்திருக்கிருர்.



இதுவிஷயமாக கருத்து எதையும் வெளியிடாமல் மௌனமாய் இருக்கும்படி தமது அரசாங்க அதிகாரிகளுக்கும் அவர் உத்தரவிட்டிருக்கிருர். அதிபரின் இந்த உத்தரவினுல் அமைதிப் பேச்சுக்கள் பற்றி எதுவித தகவலையும் கிரகிக்க முடியாமல் இருக்கின்றது.

இதற்கிடையில் தென் வியட்னும் ஜனுதிபதி ஜெனரல் தியு தேசிய விடுதலை முன்னணியுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிருர்.

## கோவில் பிரார்த்தனையில் தமிழ்நாடு அமைச்சர்

சென்னை மார்ச் 26

மழைக்காக நடைபெற்ற கோயில்பிரார்த்தனையொன்றில் தமிழ் நாடு அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் திரு கே. வி. சுப்பையாவும் வந்து கொண்டார். மக்கள் நன்மைக்காக செய்யப்படும் எல்லாக் காரியங்களையும் தாம் வரவேற்பதாக அவர் அப்பொழுது கூறினுர். மகாபலிபுரம் பலசயனபெருமாள் கோயிலில் இந்தப் பிரார்த்தனை நடைபெற்றது.

கோயிலில் அவருக்கு பரிவட்டம் கட்டி வரவேற்பு கொடுக்கப்பட்டது.

நெமிலி ஆளவந்தார் சமாதி நுழைவாயிலுக்கு சுப்பையா அடிக்கல் நாட்டினுர். மேல் சபை தலைவர் மாணிக்கவேலரும் கலந்து கொண்டார்.

## மோசடி செய்தார்

குரும்பசிட்டி, புதன்

சகோதரியிடமிருந்து ரூ. 485 பெறுமதி வாய்ந்த சங்கிலியை நம்பிக்கை மோசடி செய்ததாக சகோதரன்மீது தொடரப்பட்ட வழக்கில் விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மல்லாகம் நீதிபதி திரு. எம். சணமுகலிங்கம் தண்டனை வழங்குவதற்காக இம்மாதம் 31ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளார்.

காங்கேசன்துறைப்பொலிஸார் கடந்த வருடம் வைகாசி மாதம் 23-ம் திகதி காங்கேசன்துறை வாசியான என். அன்னம்மா என்ற பெண்மணியிடமிருந்து சங்கிலியை நம்பிக்கை மோசடி செய்ததாக நாவாந்துறையைச் சேர்ந்த என். கந்தையாமீது இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் சிவ. சிறீதரன் வழக்கை நடத்தினுர்.

## 'கஷ்டத்தை நிவர்த்தி செய்யுங்கள்'

யாழ்ப்பாணம், வியா.

''எங்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யுங்கள்.''

இவ்வாறு கேரதீவு-சங்குப்பிட்டிப் பிரயாணிகள் கிளிநொச்சித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கும் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீற்றர்சுக்கும் தந்தி அனுப்பியுள்ளனர்.

அந்தத் தந்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

பூநகரி, மன்னர் போன்ற இடங்களுக்குப் பிரயாணம் செய்யும் மக்கள் கேரதீவில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட வேண்டியிருக்கின்றது. அரசாங்கத்தினுல் தண்ணீர் வைப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருந்தும் தண்ணீர் வைக்கப்படவில்லை. ஆயச் சேவையைப் பொறுப்பேற்ற பூநகரி ப. நோ. கூ. சங்கச் சமாசம் இதுவிஷயத்தில் பாராமுகமாகவிருப்பது கவலையைத் தருகின்றது. (ந. நி.)

...மறைந்து இருபத்திரண்டு

## புதிய ஜே. பி.

பருத்தித்துறை, புதன்

கரவெட்டி கிழக்குப் பகுதிக்குப் புதிய சமாதான நீதிபதியாக முன்னுள் கிராம விதானையாராகிய திரு. கே. சதாசிவம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல சமூக சேவைகளில் ஈடுபட்டு உழைத்த திரு. சதாசிவம், காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. கே. சிவசுப்பிரமணியத்தின் மாமனுராவர்.

## திருப்பணி

யாழ்ப்பாணம், வியா

ஆனைப்பந்தி நாவலர்வீதியில் அமைந்திருக்கும் வயிரவ கோவில் ஆனைப்பந்தி இந்து வாலிப முன்னணியினரால் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

இந்து வாலிப முன்னணியின் தலைவர் திரு. ஏ. எஸ். தியாகராசாவின் முயற்சியால் திருத்தி அமைக்கப்பட்டதைக் கொண்டாடுமுகமாக நாளை விசேஷ பொங்கல் நடைபெறவிருக்கிறது. (ந. நி.)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கல்வியின் நோக்கம் புனிதமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் கல்வியால் வருங்கால சந்ததியினர் புனிதமான கெடுதலில்லாத வாழ்வு வாழ்ந்து நமக்கும் சமுகத்துக்கும் உதவ முடியும். — மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 14-ந்திகதி
(27-3-69)


## அயூபுக்குப் பின்..

பத்து வருடகால ஆட்சியின்பின் பாகிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தை படைத்தளபதியிடம் ஒப்படைத்துவிட்டு பீல்ட் மார்ஷல் அயூப்கான் வெளியேறியிருக்கிறார். அயூப் வெளியேறியிருப்பது ஆச்சரியமல்ல. எப்படி ஆட்சி பீடத்துக்கு வந்தாரோ அப்படியே ஆட்சியிலிருந்தும் அகன்றிருக்கிறார். தனிப்பட்ட சர்வாதிகாரியொருவருக்கு நேரும் கதிதான் அயூபுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயக நாட்டில் ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்படுத்துவதைவிட சர்வாதிகார ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்துவது எச்சமயத்திலும் எந்நேரத்திலும் எப்படியும் நிகழலாம். இதற்கு அயூபின் வெளியேற்றமும் ஓர் உதாரணம்.

எதிர்க்கட்சியினரதும் மாணவ இயக்கத்தினரதும் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்று அவர்களின் விருப்பத்தை அயூப்கான் சமீபகாலத்தில் நிறைவேற்றிவந்துள்ள போதிலும் கிழக்குப் பாகிஸ்தானில், கொலை, கொள்ளை, தீவைப்பு போன்ற வன்முறைச் செயல்கள் அதிகரித்து நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாத சக்தியற்ற நிலையில் பதவியில் நீடித்திருப்பதைவிட பீல்ட்மார்ஷல் அயூப்கான் ஆட்சிப் பொறுப்பை, படைத் தளபதியிடம் ஒப்படைத்துவிட்டு விலகியிருப்பது வரவேற்கத்தக்கது. சர்வாதிகாரியாக அவர் விளங்கியபோதிலும் நாட்டின் நலனையும் நாட்டு மக்களின் நலனையும் கருதி அவர் நல்ல பல காரியங்களைச் செய்திருப்பதையும் போட்டி பூசல்களால் ஸ்திரமற்றிருந்த அரசியல் நிலையை ஸ்திரமானதாக்கியதையும் இராணுவ அதிகாரியாக பதவி வகித்து ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் வல்லரசுகள் பலவற்றுடனும் நட்புறவு கொண்டு நாட்டின் தேவைகளை நிறைவேற்ற எல்லோ

மறந்துவிடமுடியாது. படைத்தளபதியிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்து விட்டு மூன்றுமாதம் விடுமுறையில் செல்வதாக அயூப் அறிவித்திருந்தாலும் அவர் மீண்டும் ஆட்சிபீடத்துக்கு வருவாரென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

அயூபின் சகாப்தம்முடிந்துவிட்டது. இனி என்ன? சர்வாதிகார ஆட்சி நீங்கி ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையும் இந்தக் கோரிக்கைக்கு அயூபை பணியவைப்பதற்காக கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. ஜனநாயக ஆட்சி அமைப்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கு அயூபும் ஒப்புக்கொண்டார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து புதிய சூழ்நிலையை உருவாக்கும் வரை பாகிஸ்தான் அரசியல்வாதிகள் பொறுத்திருந்திருக்கலாம்: என்றாலும் எந்த விதமான சூழ்நிலையில் அயூப் இப்போது பதவியிலிருந்து விலகியிருக்கிறார் என்பதற்கு சரியான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சிமுறை வரவேண்டுமென்பதற்காகவே அயூப் வெளியேற்றப்பட்டிருக்கிறார். ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கும்மக்கள் ஆட்சி ஏற்படுவதற்கும் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் அங்கு முதலில் அமைதியேற்பட வேண்டும். ஆட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் படைத்தளபதி நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதில் வெற்றிபெறுவாரென நம்பலாம். இதன்பின் எந்தக் கட்சி அல்லது எவர் ஆட்சிக்கு வந்தாலும் வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமளிக்காது, நாட்டின் அமைதி, நாட்டின் முன்னேற்றம், அயல்நாடுகளுடன் நட்புறவு ஆகியவைகளில்

## திருமலைச் செய்திகள்

### இடமாற்றத்துக்கு ந. சபை ஆட்சேபம்

திருக்கோணமலை, புதன் திருக்கோணமலை மாவட்டத்தில் கடமையாற்றும் மாவட்ட மாஜிஸ்டிரேட் திரு. எஸ். பி. குணவர்த்தனவை இடமாற்றம் செய்யவேண்டாமென நீதியமைச்சரையும் நீதிபரிபாலன சேவை ஆணையாளரையும் கோரும் தீர்மானம் ஒன்றை திருக்கோணமலை நகரசபை தனது விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

0 0 0

### 23 பேர் ராஜினுமா

திருக்கோணமலை தபால், தந்தி அதிகாரிகளின் கிளைச் சங்கத்தைச் சேர்ந்த 23 அங்கத்தவர்கள் ராஜினுமாச் செய்துள்ளனர். அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைவர் தெரிவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தலைவர் திரு. பி. வாமதேவன் உட்பட 23 பேர் ராஜினுமா செய்தனராம்.

0 0 0

### வேடுவருக்கு வீடு வசதி

வேடுவருக்கு கிராம விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்க கிராம அபிவிருத்தி இலாகா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மூதூர் காரியாதிகாரிகளின் கீழுள்ள கட்டைபறிச்சான் சேனைப் பகுதியில் வாழும் வேடுவர் சமூகத்தினருக்கு வீடு கட்டிக் கொடுக்க மூதூர் காரியாதிகாரி திரு. சாம்சிவஐயர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

0 0 0

### இறுதிப் போட்டி

பிறமியர் வெற்றிக்கிண்ணத்திற்கான முதலாவது சுற்று உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 28-ந் திகதி முடிவடைகின்றன. முதலாவது பிரிவில் 12 கழகங்களும் 2-வது பிரிவில் 8 கழகங்களும், 3-வது பிரிவில் 8 கழகங்களும் பங்கு பற்றுகின்றன.

## மட்டக்களப்பு செய்திகள்

# ஆகஸ்டில் நடப்பது தமது கடைசிப் போராட்டமாம்

## ம.பொ.சி. கூறுகிறார்

சென்னை மார்ச் 26

வெள்ளையர்கள் ஆட்சியில் போராட்டம் நடத்தி வாங்கப்பட்ட சுதந்திரம் பறிபோய் மீண்டும் நம் பேரப்பிள்ளைகள் சுதந்திரத்திற்காக கிளர்ச்சி செய்ய வேண்டிய நிலை வரக் கூடாது என்பதற்காகத்தான் இந்த மாநில சுயாட்சி போராட்டம் நடைபெறவிருக்கிறது.

இவ்வாறு தமிழரசுக் கழகத்தின் தலைவர் திரு ம பொ சிவஞானம் அறிவித்திருக்கிறார். ஆகஸ்ட் மாதம் தாம் நடத்தவிருக்கும் சுயாட்சி போராட்டம் சம்பந்தமாக அவர் அண்மையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

மாநில சுய ஆட்சிக்கு முழு ஆதரவு கொடுக்கக்கூடிய கருணாநிதி நமக்கு முதலமைச்சராக கிடைத்திருக்கிறார். அவரை முதலமைச்சராக நாம் பெற்றிருப்பதே ஒரு வகையில் அதிர்ஷ்டம்என்றே கருதுகிறேன்.

இந்திராகாந்தியே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதை பரிசீலிக்கும் இந்த நேரத்தில் மொரார்ஜி மட்டும் மத்திய அதிகாரங்களை மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்க முடியாது என்று கூறியிருக்கிறார்.

பிரதமர் ஆதரிக்கும்போது இவர் யார் அதை மறுக்க.

நாம் ஏன் மாநில சுய ஆட்சி வேண்டும்என்கிறோம்? மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் பங்கு சரியில்லை.

பணக்காரர்களுக்கு தொழில் அதிபர்களுக்கு சீமான்களுக்கு வரிபோடும் அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது.

அந்த அதிகாரங்கள் நம்மிடம் இல்லை. மேலும் ஏழை மக்கள் மீது வரி போடக் கூடாது என்பதற்காகத் தான் அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்கிறோம்.

இப்போது புதிதாக ரிசர்வ் பாங்கியில் மாநிலங்களுக்கு அதிக பற்றுக்கூடாது என்று மொரார்ஜி அறிவித்து இருக்கிறார்.

ஒரு ... ஒரு கம்பனி அல்லது ஒரு தொழிலதிபர் ஒரு பாங்கி

வழிகாட்டியாக விளங்க விளங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு 'நம் போராட்டம்வெற்றிபெறும் நம் முயற்சி வெல்லும்என்று கூறி விடைபெறுகிறேன்.

## பெற்றோர் முன்வர வேண்டும்

சங்கானை, புதன்

'வளர்ந்துவரும் ஜனத்தொகையினுல் கல்விப்பகுதிக்குச் செலவிட வேண்டிய பணத்தொகையும் அதிகரித்து எழுகின்றது. என்வே பாடசாலையைவளர்ப்பதற்கு அரசாங்க பணத்தை நம்பியிராதுபெற்றோர் தாமாகவே முன்வந்து தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.' இவ்வாறு கனகநாயகம் குணமகாவித்தியாலய சுகாதார விழாவில் வரவேற்புரை நிகழ்த்தியஅதிபர் திரு. மு. சிவானந்தம் குறிப்பிட்டார்

விழாவையொட்டி இல்லங்களிடையே நடந்த விளையாட்டுப் போட்டியில் கம்பன் இல்லம் 119 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பாரதி இல்லம் 109 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம் 93 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்ற கயிறு இழுப்புப் போட்டியில் பரபரபேற்பட்டது. பெற்றோருக்கும் பழைய மாணவர்களுககுமிடையே நடந்த இப்போட்டியில் கயிறு அறுந்து சிறிது நேரம் குழப்பநிலை ஏற்பட்டது. புதிய கயிறு தருவிக்கப்பட்டபின் பழைய மாணவர்கள் போட்டியில் வெற்றி பெற்றனர்.

## இடமாற்றத்தை ரத்துசெய்ய கோருவர்

நாவற்குழி, வியாழன்

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பாலர் பிரிவுத் தலைமையாசிரியரை இடமாற்றவேண்டாமெனப் பிரஸ்தாப வித்தியாலய பெற்றோர் ஆசிரியசங்கம்

## இஸ்லாமிய புத்தாண்டு

யாழ்ப்பாணம், வியா.

இஸ்லாமிய புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் முஸ்லிம் இளைஞர் முன்னேற்றச்சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டகூட்டமொன்று கடந்த வியாழன் இரவு நடைபெற்றது.

சிவல பள்ளிவாயல் முன்றலில் யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம். ஏ. சி. ஏ காதர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது தலைவர் புத்தாண்டின் மகத்துவம் பற்றியும் அவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு இவ்வாண்டில் முஸ்லிம் சமூகத்திற்காக ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய நற்பணிகள் பற்றியும் கூறினார்

21-ம்வட்டார மாநகர சபை அங்கத்தவர் ஜனுப் எம். ஜி. பசீரும் பின்னர் ஆசிரியர்களான எம். அப்துல் றஹீம், எம். ஏ கையூம், மௌலவி அபுல்ஹசன் ஆகியோரும் உரையாற்றினர். ஈற்றில் தலைவர் பின்னுரையுடனும் சலவாத்துடனும் புத்தாண்டுவிழா இனிது முடிவுற்றது. (மு. நி)

## ஹஜ் யாத்திரிகர்கள் திரும்பினர்

யாழ்ப்பாணம், வியா.

புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுமுகமாக சென்றமாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்திலிருந்து மக்கா சென்ற அல்ஹாஜ் என். எம். மீரான் முகியித்தீன் ஆலிம், அல்ஹாஜ் எம். ஏ. எம் ஜுனைத், அல்ஹாஜ் ஏ. எம். சஹீத் ஆகியோர் தாயகம் திரும்பினர். இவர்கள் மதினு சென்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புனித அடக்கஸ்தலத்தையும்தரிசித்தனர். இன்று காலை நூற்றுக்கணக்கானோர் யாழ் புகையிரத நிலையத்தில் அவர்களை வரவேற்று வேதபாராயணத்துடன் அவர்களின். இல்லத்திற்கு அழைத்துச்சென்றனர். (மு நி)

## 'பண்பாடு வேண்டும்'

வெள்ளவத்தை, புதன்

"இலங்கை மக்கள் மத்தியிலே கொடியநோயாகப்

## ஐயாறன் எழுதுவது

இன்று ராமநவமி. அதாவது ராமர் பிறந்த நாள். ஈழத்திலும் பாரத நாட்டிலும் இந்த விழாவைக் கொண்டாடுகிறார்கள். பங்குனி மாதம் கடுங்கோடையிலே இது வருவதால், தமிழகத்திலே பல வீடுகளிலும் பானகம், நீர்மோர், விசிறி எல்லாம் இலவசமாகக் கொடுப்பது வழக்கம். இப்போது பானகம், நீர்மோரெல்லாம் அநேகமாக மறந்தே போய்விட்டது.

கொழும்பிலே ஸ்ரீ ராமகான சபையார் சுமார் 30 வருடகாலமாக இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர். நேற்றும் முந்தினமும் ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்திநகர் கோவிலில் இச் சபையார் பூசை, இன்னிசை, பேச்சு முதலியன நடத்தி சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

0 0 0

ஸ்ரீ ராமர், சைவருக்குரிய தெய்வமா? அல்லது வைணவர்களுக்கா என்று வேறு சமய அன்பரொருவர் கேட்கிறார். இதுபற்றிய சந்தேகம் இந்துக்களிலேயே பலருக்குண்டு மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஸ்ரீ ராமரும் ஒருவராதலால் அவர் ஒரு வைணவதெய்வம் என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது.

ஆனல் ஸ்ரீ ராமபக்தரான ஸ்ரீ தியாகரஜ சுவாமிகள் இதுபற்றி தமது பல கீர்த்தனைகளில் விளக்கியுள்ளார். "எவரெனீ" என்ற பாட்டிலே சைவத்துக்கும் வைணவத்துக்கும் பொதுத்தெய்வமென்கிறார். சிவமந்திரமாகிய "நமசிவாய" என்ற சொல்லில் "ம" வையும் மாதவ (வைணவ) மந்திரமாகிய (நாராயணய) என்ற மந்திரத்தில் "ரா" வையும் சேர்த்து "ராம" என்ற பெயர் உருவாயிற்றே என்று அப்பாட்டில் கேட்கிறார் ஸ்ரீ தியாகராஜர்.

வேறொரு கீர்த்தனையில் "நீ பிரம்மாவோ, விஷ்ணுவோ, சிவனே அல்ல. பிரம்மா பொய்கூடச் சொன்னாராம். சிவபிரானின் திடீரெனக் கோபம் வரக்கூடும். விஷ்ணு ஆயின் அவர்பலிச் சக்ரவர்த்தியை வாமனவதாரமெடுத்து தந்திரமாக வென்றார். ஆனல் நீயோ எதிராளிகளிடத்திலும் கருணையும் நேர்மையும் காட்டுகிறாய். பக்தர்கள் கேட்பதையெல்லாம் தருகிறாய். ஆகவே மூவருக்

ராகக் கீர்த்தனையில் போற்றுகின்றார்.

ராமரென்பது சிவ சக்தி வடிவமென்றும் 'அரன்' என்ற பெயரிலிருந்து "ர" வும், "உமா" என்ற சக்தியின் பெயரிலிருந்து "மா" வும் சேர்ந்து "ரமா" (இன்பம்) ஆயிற்றென்றும் "ரமேதி ராம" (இன்பம் கொடுக்கிறவர் யாரோ அவரே ராமர்) என்றும் ஸ்ரீ தியாகராஜரே மற்றொரு கிருதியில் கூறுகிறார்.

சமயச் சண்டைகள் பாரத நாட்டில் ஏற்பட்ட அக்காலத்தில் எல்லாருக்கும் பொதுவான சமரச தெய்வமாக ராமர் விளங்கியதாகத் தெரிகிறது. இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தெய்வம் இவர். பௌத்த சிங்களவரில்கூட சிலர் ராமநாயக்கா, லெட்சுமண், சீதா என்று பெயர் வைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம்.

ஹரி வேறு, சிவன் வேறு என்று சிலர் குறுகிய வாதம் பேசுவதுண்டு. இரு சமயத்தவருக்கும் வேற்றுமை கிளப்பி விடுவதில் சிலருக்கு மிக விருப்பம். இவர்களுக்குத்தக்க பதில் அளிப்பது போல் "ஹரியும் சிவனும் ஒண்ணு. இதை அறியாதவன் வாயிலே மண்ணு" என்ற வசனமும் ஏற்பட்டுள்ளது.

சர்வசமய சமரசம் பேசிய மகாத்மாகாந்தி அடிகள், "ராம ராம" என்று கடைசி மூச்சுவரையும் சொல்லிச் சொல்லி நாட்டுக்கு அரசியல் விடுதலையும் வாங்கித் தந்தார். மனிதரால் ஆகாதது, தெய்வத்தால் அவரது பெயரால் (அது என்ன பெயராலும்சரி) ஆகுமென்று பெரியார்கள் தங்கள் அனுபவத்தால் உணர்ந்து உறுதியாகச் சொல்லியுமுள்ளனர். எல்லாம் நம்பிக்கையில்தான் தங்கியுள்ளது. நம் பின்னேர் நலமடைவர். இது நான்கு மறைத் தீர்ப்பு.

இக்காலத்தில் நம்மில் பலருக்கும் இவ்வித நம்பிக்கை ஏற்பட மாட்டேனென்கிறது. அதனுல்தான் நமது சங்கடமெல்லாம்.

0 0 0

கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம், வீடலே சக்கரத்தால் எறிந்து பின் அன்பு கொண்டு, தேடி மால் செய்த கோயில் திரு இராமேச்சுரத்தை, நாடி வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் ஸ்திரமற்றிருந்த அரசியல் நிலையை ஸ்திரமானதாக்கியதையும் இராணுவ அதிகாரியாக பதவி வகித்து ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் வல்லரசுகள் பலவற்றுடனும் நட்புறவு கொண்டு நாட்டின் தேவைகளை நிறைவேற்ற எல்லோருக்கும் நல்லவராக நடந்து கொண்ட ராஜதந்திரத்தையும் பாகிஸ்தான் மக்கள்

வெற்றிபெறுவாரென நம்பலாம். இதன்பின் எந்தக் கட்சி அல்லது எவர் ஆட்சிக்கு வந்தாலும் வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமளிக்காது, நாட்டின் அமைதி, நாட்டின் முன்னேற்றம், அயல்நாடுகளுடன் நட்புறவு ஆகியவைகளில் சாதிக்கும் சாதனைகளில் தான் பாகிஸ்தானின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

## பாலம் அமைப்போம்

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'' என்றுபாரதியார் பாடினர். ஆனல் இதை 1954-ம் ஆண்டில் செயலில் நிறைவேற்றினர் ஈழத்தமிழன் நவரத்தினசாமி. ஆம். பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து கோடிக்கரையை அடைந்துஇந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நட்புப் பாலம் அமைத்தவர் நவரத்தினசாமி. இதற்கு இலங்கை - இந்திய அரசாங்கங்கள் உதவியும் ஊக்கமும் என்ன காரணத்துக்காகவோ அளிக்கத் தவறிவிட்டன.

ஆயினும் மிகிர்சென் என்றநீச்சல்வீரர்ராமேஷ்வரத்திலிருந்து தலைமன்ஞருக்கு நீந்திக் கடந்து மற்ருெரு புதிய சாதனையை நிலைநாட்டியதன் மூலம் புதிய பாலம் ஒன்றை அமைத்தார். இது கடந்த இரண்டு ஆண்டுகளாகஇந்திய-இலங்கை நீச்சல் வீரர்களுக்கிடையே புதிய உற்சாகத்தை ஏற்படுத்தி இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இணைப்புப்பாலத்தை ஏற்படுத்தி உதவி வருகிறது. நாளை அதிகாலையில் தலைமன்ஞரிலிருந்து நீச்சல் போட்டி ஆரம்பமாகிறது. இதில் இலங்கை, இந்திய நீச்சல்வீரர்கள்கலந்துகொள்கிருர்கள்,

இந்த நீச்சல் போட்டியை'சட்டவிரோதக்குடியேற்றத்துக்கு நடைபெறும் பயிற்சி' என்று இங்குள்ள சில தீவிரவாதிகள் சந்தேகக்கண் கொண்டு வர்ணித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சட்டவிரோதக் குடியேற்றம் இலங்கைக்கு மட்டும் உள்ள பிரச்னை யல்ல. இந்தியாவுக்கும் இருக்கிறது; வேறுபல நாடுகளுக்கும் இந்தப்பிரச்னை இருக்கத்தான் செய்கிறது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் யாவும் நல்ல பயன் கொடுக்கத் தொடங்கிவிட்டால் இங்கிருந்தும் பலர் அங்கு சட்டவிரோதமாகக் குடியேறமாட்டார்களென்பது என்ன நிச்சயம்? ஆனல் இருநாடுகளுக்கிடையிலும் இப்போதுள்ள பிரயாணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்ருன யாத்திரை உரிமைக்கு தடைசெய்யாமல் விடுத்தால் எவரும் எந்த நாட்டிலும் சட்டவிரோதமாகக் குடியேறவோ, அங்கு நிரந்தரமாகத் தங்கிவிடவோ விரும்பமாட்டார். நீந்திக் கடக்கக்கூடியநிலையில் நெருங்கியுள்ள இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் பிரயாணக் கெடுபிடிகள் அவசியம்தானு?

## போத்தலால் குத்தியவருக்கு அபராதம் ரூபா 100

வல்வெட்டித்துறை. புதன்

கரவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவன் நெல்லியடியைச்சேர்ந்த ஜி. மரியநாயகத்தைக் கடந்த செப்டம்பர் மாதம் 29-ம் திகதி போத்தலால் குத்திக் காயப்படுத்திய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவால் எதிரியான இராகவனுக்கு ரூபா 100 அபராதம்வி திக்கப்பட்டது.

## பலியிடுதல் நடைபெறவில்லை

சுழிபுரம், புதன்

சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் ஆடு, கோழி பலியிடுதல் போன்ற கருமங்கள் நேற்று நடைபெறவில்லை. மிகவும் அமைதியான முறையில் பொங்கல் பூசை நடைபெற்றன. மாமிச அவியல் போன்ற கருமங்கள்நடைபெறவில்லை ஆயிரக்கணக்கான அடியவர்கள் தமது நேர்த்திக்கடனை பொங்கல் பூசை செய்து நிறைவேற்றினர்.

12 கழகங்களும் 2-வது பிரிவில் 8 கழகங்களும், 3-வது பிரிவில் 8 கழகங்களும் பங்கு பற்றுகின்றன.

# மட்டக்களப்பு செய்திகள்

### தமிழ் காங்கிரஸ் போட்டியிடும்

அடுத்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடும் என தெரியவருகிறது. மட்டக்களப்பு தமிழ் காங்கிரஸ் கிளையின் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது மட்டக்களப்பு தமிழ் காங்கிரஸ் கிளையின் தலைவரும், மட்டக்களப்பு மாநகரசபையின் அங்கத்தவருமாகிய திரு எஸ். கதிரவேலுப்பிள்ளையின் பெயர் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டபோதிலும் அவர் அதை விரும்பவில்லை எனப் பேசப்படுகின்றது.

அவர் தமது பெயரை வாபஸ் பெற்றதன் காரணத்தினல் மட்டக்களப்பு மாநகரசபை அங்கத்தவராகிய திரு இராஜன் செல்வநாயகத்தின் பெயர் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டதாகவும் அறிய வருகிறது.

இதுசம்பந்தமாகதிருகதிரவேலுப்பிள்ளையைவிசாரித்தபோது திரு இராஜன் செல்வநாயகத்தின் பெயர் தமிழ் காங்கிரஸ் மத்திய செயற்குழுவிற்கு அறிவித்திருப்பதாகவும் அங்கிருந்து முடிவு வந்தபின்பு தாம் ஊர்ஜிதப்படுத்த முடியும் எனறும் கூறினர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலிலே கிழக்கு மாகாணத்திலே தமிழ் காங்கிரஸ் பல தொகுதிகளில் போட்டியிடும் என்றும் அவர் கூறினர். ஆனல் அபேட்சகர்களை நியமிக்கும் பொறுப்பை தலைமைப்பீடத்திடமே விட்டபோதிலும் தங்கள் சிபார்சுகளைகாலக்கிரமத்தில் தெரிவிப்பர் என்று கூறினர்.

0 0 0

### தமிழரசுக் கட்சியின் நிலை

மட்டக்களப்பு இரட்டைத் தொகுதியான காரணத்தினல் தமிழரசுக் கட்சி ஒரு தமிழரையும் முஸ்லிம் ஒருவரையும் கட்சி அங்கத்தவராக நிறுத்த வேண்டும் என கட்சி அனுதாபிகள் கருதுகின்றனர். கல்முனையில் பல முறை தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியுற்ற ஜனப் மசூர் மௌலானவை மட்டக்களப்பில் நிறுத்துவதினல் அவருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கக்கூடுமென கட்சி அனுதாபிகள் அபிப்பிராயப் படுகின்றனர்.

நாம் கேட்கிறேம்.

இப்போது புதிதாக ரிசர்வ் பாங்கியில் மாநிலங்களுக்கு அதிக பற்றுக்கூடாது என்று மொரார்ஜி அறிவித்து இருக்கிருர்.

ஒருதனிமனிதன் அல்லது ஒரு கம்பனி அல்லது ஒரு தொழிலதிபர் ஒரு பாங்கியில அதிகப்பற்று வாங்க முடிகிறது. மூன்றரைக் கோடி மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசு அதிக பற்று வாங்கக்கூடாதுஎன்று தடை விதித்திருக்கிறது.

மாநில அரசுகள் கடன் எழுப்புவதற்கு பிரதமர்கண்டனம் தெரிவித்து இருக்கிருர். உரிய மானியத்தை ஒழுங்காகக் கொடுத்தால் மாநிலஅரசு ஏன் கடன் திரட்டுகிறது?

இந்தப்போராட்டம்அமைதியான முறையில் நடக்கும். சாத்விக முறையில் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தை நடத்திஞல் என்னைச் சிறையில் அடைக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. அவர்கள் என்னைச் சிறையில் அடைப்பதை நான்எதிர்க்கவில்லை. எதிர்க்கவும்மாட்டேன்.

ஏனென்ருல் அவர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை காப்பாற்றவேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

அவர்கள் என்னைச் சிறையில் அடைக்காவிட்டால் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி கவர்னர் ஆட்சி கொண்டுவர முயற்சிப்பார்கள்.

மாநில போராட்டத்திற்கு ஆதரவுதரவேண்டும் என்று ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மாநிலத்திற்குகூடுதலான அதிகாரம் மத்திய அரசு தரவேண்டும் என்ற தீர்மானத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பவேண்டும்.

ஊராட்சி மன்றங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும்.

நன்கு நடக்கவிருக்கும் இந்த மாநில சுயாட்சி போராட்டம் நான்என்வாழ்வில்போராடவிருக்கும்கடைசிப் போராட்டமாகும்.

இந்திய துணைக்கண்டத்திலே நிலையான அரசை அமைத்து இருக்கும் தமிழகம் மாநில சுயாட்சி அமைத்து இந்தியா முழுமைக்கும்

## கோருவர்

நாவற்குழி, வியாழன்

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பாலர் பிரிவுத் தலைமையாசிரியரை இடமாற்றவேண்டாமெனப் பிரஸ்தாப வித்தியாலய பெற்ருேர் ஆசிரியசங்கம் கல்வி இலாகாவையும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தையும் கேட்கவிருக்கிறது. இது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற சங்கஆலோசனைக கூட்டத்தில் இப்பிரச்னை சம்பந்தமாகஎம். பியிடமும் கல்வி இலாகாவிடமும் நேரில் சென்று பேசுவதற்கு ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது.

இங்கு பதவி ஏற்கும் ஆசிரியர்களை குறுகிய காலத்திலேயே மாற்றிவிடுவது வழக்கமாகிவிட்டதென்றும். இவ்விதமாற்றத்திஞல் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் இனிமேல் இவ்வாறு நிகழாதிருக்கப்பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் சங்கம் கேட்கவிருக்கிறது. இப்போது இங்கு கடமையாற்றும் தலைமையாசிரியர் இங்கு வந்து மூன்று மாதங்களேயாகுமென்பது குறிப்பிடத்தக்கது.

## வெங்காயம் அதிக விளைச்சல்

சுழிபுரம், புதன்

இவ்வாண்டு காலபோக வெங்காயச் செய்கையில் இப்பகுதி உற்பத்தியாளர் அதிக விளைச்சலைப் பெற்றுள்ளனர். ஒரு அந்தர் நட்டவர்கள் பத்து அந்தர் என்ற வகையில் விளைவைப் பெற்றுள்ளனர். அத்துடன் பார்வைக்கு நல்ல தரத்தையுடையதாகவுமுள்ளது. பண்ணுகம் கிராமத்திலுள்ள கமக்காரர்கள் அநேகர் வெங்காயச்செய்கையால் நல்ல பயனைப் பெற்றுள்ளனர்.

## பிரதமரை கோருவர்

காலி, புதன்

நாட்டிலுள்ள சகல ஆஸ்பத்திரிகளிலுமுள்ள நோயாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சோறு வழங்குமாறு பொத்தால கிராமசபை பிரதமரையும் சுகாதார அமைச்சரையும் கோருவதென முடிவுசெய்தது.

னர். (மு. நி)

## 'பண்பாடு வேண்டும்'

வெள்ளவத்தை, புதன்

''இலங்கை மக்கள் மத்தியிலே கொடியநோயாகப் பரவியுள்ள தீண்டாமை வெகு விரைவில் அழிய வேண்டும். மனிதரை மனிதர் பண்பாடாக மதிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். கொழும்பில் நடைபெறும் இச் சித்திரக் கண்காட்சி தீண்டாமைக்குஎதிரான ஒரு வெகுஜன அபிப்பிராயத்தை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகதுல்லை.''

இவ்வாறுசெனட்டர் திரு. ரெஜி பேரேரா கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரின் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் திரு, என். சண்முகதாசன், திருமதி சண்முகதாசன் ஆகியோருட்படப் பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணத்தில் ஹரிஜன மக்கள் எவ்வாறு நடத்தப்படுகின்ருர்கள், பொதுக் கிணறுகள், ஆலயங்களில் அவர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் எத்தகையன என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் மிக அழகான முறையில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றின் அடிக்குறிப்புகள் சிங்களத்திலும், தமிழிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. பார்வையாளரின் கருத்துக்களுக்காக ஒரு புத்தகமும் வைக்கப்பட்டுள்ளது

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மலர் என்று ஒரு சஞ்சிகையும் விற்பனை செய்யப்பட்டது.

## நகை, பணம் திருட்டு

அளவெட்டி, புதன்

அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் என்பவரது வீட்டை உடைத்து 6000 ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் யாரோ இனந்தெரியாதவர்கள் திருடிச்சென்றுவிட்டதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக சுன்ஞகம் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ப் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

வரக்கூடும். விஷ்ணு ஆயினு அவர்பலிச் சக்ரவர்த்தியை வாமனவதாரமெடுத்து தந்திரமாக வென்ருர். ஆனல் நீயோ எதிராளிகளிடத்திலும் கருணையும் நேர்மையும் காட்டுகிருய். பக்தர்கள் கேட்பதையெல்லாம் தருகிருய். ஆகவே மூவருக்கும் மேலானவனே நீ'' என்று ''எந்துண்டி வெடலிதிவோ'' என்ற தர்பார்

சங்கடமெல்லாம்.

0 0 0

கோடி மாதவங்கள் செய்து குன்றினர் தம்மையெல்லாம், வீடலே சக்கரத்தால் எறிந்து பின் அன்பு கொண்டு, தேடி மால் செய்த கோயில் திரு இராமேச்சுரத்தை, நாடி வாழ் நெஞ்சமேநீ நன்னெறியாகுமன்றே.

... அப்பர் அடிகள்

# ஆசிரியர் சங்க தலைவர் அதிருப்தி

பருத்தித்துறை புதன்

''குடிபேதையில் பாடசாலைக்கு வரும் ஆசிரியர் தண்டிக்கப்படல் வேண்டுமென்றும் பாடசாலையில் புகைபிடிக்கும் ஆசிரியர்மீதும் தண்டனை விதிக்க வேண்டுமென்றும் ஓர் உயர்கல்வி அதிகாரி கூட்டமொன்றில் பேசிய தாக பத்திரிகைகள் கூறுகின்றன

இதன் அர்த்தமென்ன வெனில் ஆசிரியர் இவ்விதமாகப் பாடசாலைகளில் நடந்து கொள்கிருர்கள் என்பதே இவ்வித ஆசிரியரைக் கையும்மெய்யுமாகப் பிடித்து வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து கூட்டங்களிற் பேசுவதால் ஆசிரிய உலகமே பண்பட வேண்டியுள்ளது இவ்வாறு வடமராட்சி ஆசிரியர் சங்கத் தலைவர் திரு தோமஸ் ஈப்பன் கூறுகிருர்

## தேடப்பட்டவர் கைது

அளவெட்டி, புதன்

பொலிசாரால் ஒரு வருடமாகத் தேடப்பட்டுவந்த கரையூரைசேர்ந்தகந்தசாமி சங்கரப்பிள்ளை என்பவர் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தற்போது விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்

## ரூ. 100 அபராதம்

குரும்பசிட்டி, புதன்

சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்ததாக காங்கேசன்துறை கலால் பகுதியினரால் ஈ. மதியாபரணம்என்பவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் ரூபா 100 அபராதம் விதித்தார்.

## தற்கொலை

உருத்திபுரம் புதன்

உருத்திரபுரம் 8-ம் வாய்க்காலில் கொன்சவ் என்பவர் மனஸ்தாபம் காரணமாக நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்கொண்டார்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை முருகேசபிள்ளை (அப்பர்)

வட்டுக்கோட்டை கணபதிப்பிள்ளை முருகேசபிள்ளை (அப்பர்)காலமாகிவிட்டார். இவர் அமுதலஷ்மியின் அருமைக் கணவரும், சோமசுந்தரம் (நிதி உதவி டைரக்டர், திறைசேரி), துரைசிங்கம் (அரசாங்க வேலைப் பகுதி, பளை), பத்மஞதன் (காணி அலுவலகம், கச்சேரி, கொழும்பு), ராஜசிங்கம் (லண்டன்), யோகலஷ்மி, வடிவழகு பத்மாவதி, சரஸ்வதி (ஆசிரியை தமிழ்க் கலவன் பாடசாலை பம்பலப்பிட்டி) ஆகியோரின் தந்தையும், டாக்டர் விஜய ரெத்தினம் (வண்ணுர் பண்ணை), இராமநாதன் (ஓய்வுபெற்ற மின்வேலைப் பகுதி உத்தியோகத்தர்), கணேசன் (சுப்பிரின்டன் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை), இரத்தின சபாபதி (மின்சார வேலைப் பகுதி, தலைமைக்காரியாலயம், கொழும்பு) ஆகியோரின் மாமஞருமாவர். அன்ஞரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (27 3-69) வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து மாலை 3 மணியளவில் வட்டுக்கோட்டை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

டாக்டர். ராஜபிள்ளை.

3106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org